
01. சிங்கிதி தரம் 9 இல் கல்வி பயிலும் மாணவி ஆவாள். அவளது கல்வி நடவடிக்கைகளுக்காக பின்வரும் குணாதிசயங்களுடன் கணினியொன்றை கொள்வனவு செய்ய எதிர்பார்க்கின்றாள்.

வன்வட்டு (Hard disk) - 500 Gb

தற்போக்கு பெறுவழி நினைவகம் (Ram) - 2 Gb

முறைவழியாக்கி (Processor) - 3.0 GHz

கணினி விற்பனை நிலையத்தில் இவளின் தேவைக்கேற்ற, மேற்குறிப்பிட்ட குணாதிசயங்களுடன் கூடிய கணினியை தெரிவுசெய்யும் வரை ஒவ்வொரு கணினியாக பரிசோதித்துப் பார்க்கிறாள். அது தொடர்பான கீழே காட்டப்பட்டுள்ள பாய்ச்சல்கோட்டுப் படத்தின் A, B, C, D எனும் இடைவெளிகளை அடைப்புக்குள் உள்ள சொற்களைக் கொண்டு நிரப்புக.




( வன்வட்டின் கொள்ளளவு 500 Gb அல்லது அதற்கு அதிகமா ?, முறைவழியாக்கி, முடிவு, தற்போக்கு பெறுவழி நினைவகத்தின் கொள்ளளவு 2 Gb அல்லது அதற்கு அதிகமா ?, முறைவழியாக்கியின் கொள்ளளவு 3.0 GHz அல்லது அதற்கு அதிகமா ?,

02. சிங்கிதி அவளது தேவைக்கேற்ற கணினியை கொள்வனவு செய்தபோது விற்பனை நிலையத்தினால் வழங்கப்பட்ட, மென்பொருளொன்றை பயன்படுத்தி உருவாக்கப்பட்ட பற்றுச்சீட்டு பின்வருமாறு.

| | A | B | C | D | E |
|---|---|---|---|---|---|
| 1 | பொருள் விபரம் | அலகு விலை | தொகை | மொத்த விலை | |
| 2 | System Unit | | 1 | 15000.00 | |
| 3 | Keyboard | | 1 | 800.00 | |
| 4 | Mouse | | 1 | 500.00 | |
| 5 | | | | | |
| 6 | | | | | |
| 7 | | | | | |
| 8 | மொத்த தொகை | | | 16300.00 | |
| 9 | | | | | |
| 10 | | | | | |

I. சிங்கிதி வாங்கிய பொருளுக்கான மொத்த தொகை காட்சிப்படுத்தப்படும் கல முகவரியை எழுதுக.

II. மேலுள்ள பொருட்களின் விலை குறிப்பிடப்பட்டுள்ள கல முகவரி வீச்சை எழுதுக.